பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 62

திங்கட்கிழமை
27 ஜனவரி 2025

தை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## காலிச் சிறையில் கடும் மோதல்!
### நால்வர் காயம்

கொழும்பு, ஜன.27
காலிச் சிறைச்சாலையில் நேற்றுப் பிற்பகல் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோத 09

## இந்தியக் குடியரசு தின நிகழ்வுகள் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தில்

யாழ்ப்பாணம், ஜன.27
இந்தியாவின் 76ஆவது குடியரசுத் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் விசேட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. » 04

## தமிழக மீனவர்கள் 33 பேர் இலங்கைக் கடலில் கைது!

யாழ்ப்பாணம், ஜன.27
இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 33 பேர் தலைமன்னாருக்கு வடக்காக உள்ள கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். » 03

# தமிழர்களின் உரிமைக்காக இந்தியா எப்போதும் ஆதரவே!

### யாழ். இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 27
'வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களும் நாமும் எப்போதும் ஒரே பக்கம்தான். தமிழர்களின் உரிமைக்காகவும்,நலனுக்காகவும், கலாசாரத்துக்காகவும் என்றும் இந்தியா ஆதரவாக இருக்கும். வடக்கு – கிழக்கு மக்களின் தேவைகளை அறிந்து செயற்படும் இந்தியா என்கின்ற சகோதரனின் கதவை எந்தநேரமும் தமிழ் மக்கள் தட்டலாம்' என்று யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளார். 11



### இந்தியாவே இலங்கையின் நண்பன்

## மூன்றாம் தரப்பு அழுத்தத்துக்கு பணிந்துவிடக்கூடாது இலங்கை!

### குடியரசு தினச் செய்தியில் இந்தியப் பதில் தூதுவர் சூசகம்

கொழும்பு, ஜன.27
இலங்கையின் நம்பகத் தன்மை மிக்க நண்பன் என்பதை இந்தியா மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. ஒப்பிட முடியாத தன்னிச்சையுடன் மூன்றாம் தரப்பின் அழுத் 11

### 2025 பட்ஜெட்டில்

## அரச ஊழியர்களுக்கு 7,500/– சம்பள அதிகரிப்பு

கொழும்பு, ஜன.27
அடுத்த மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள தேசிய மக்கள் சக்தியின் கன்னி வரவு – செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 7,500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாக திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
இந்த அதிகரிப்பு 11

## பெப்ரவரியில் அநுர மத்தியகிழக்குக்கு பயணம்!

கொழும்பு, ஜன.27
மத்தியகிழக்கு நாடுகளுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் பயணம் 11

### யாழ்.பல்கலை வகுப்புத் தடை நீக்கச் சர்ச்சை:

## பதவியை உதறினார் கலைப்பீடாதிபதி!

### உண்மையை வெளிப்படுத்துக உடனடி நடவடிக்கை எடுக்குக

யாழ்ப்பாணம், ஜன.27
வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்த மாணவர்கள் சிலரின் வகுப்புத்தடையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மூதவை நீக்கியுள்ள நிலையில், இந்தத் தீர்மானத்துக்கு அதிருப்தி தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடப் பீடாதிபதி ரகுராம், பீடாதிபதி பதவியில் 11

## கொழும்பு சென்ற ரயில் ஓமந்தையில் தடம்புரள்வு

### சேவைகள் தற்காலிக நிறுத்தம்

வவுனியா, ஜன.27
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று மாலை 2.15 மணியளவில் புறப்பட்ட ரயில் ஓமந்தைப் பிரதேசத்தில் சுமார் 4.30 மணியளவில் தடம்புரண்டது.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடுகதி ரயில் ஓமந்தை 11




'சகோதரன் எண்டதால தானே நாங்களும் உரிமையா கோவிக்கிறம் கண்டியளோ'

## புதிய அரசியல் கலாசாரம் பழிவாங்கும் செயல் அல்ல

### மஹிந்த வீட்டு விவகாரத்துக்கு ஜனாதிபதி அநுர விளக்கம்

கொழும்பு, ஜன.27
புதியதொரு அரசியல் கலாசாரத்தையே நாம் ஏற்படுத்திவருகின்றோம். இதற்குப் பெயர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல. அதேபோல மக்களின் கோடிக்கணக்கான பணத்தை வீணடித்து சொகுசு வாழ்க்கை வாழவேண்டும் என்பது முன்னாள் ஜனாதிபதிகளுக்கான உரிமை கிடையாது. இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித் 11

## கலைப்பீடாதிபதியாக மீண்டும் ரகுராம் நியமிக்கப்படவேண்டும்

### இல்லையேல் சாத்வீகப் போராட்டம்

### யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி எந்த விடயத்துக்காகப் பாடுபட்டாரோ அந்த விடயத்துக்கான வெற்றியோடு மீளவும் பீடாதிபதியாக அவரே நியமிக்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவுக்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 27

**இவ்வாண்டு நெல் கொள்வனவுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நெல் கொள்முதல் செய்வதற்காக ஒரு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட அதிகபட்சத் தொகை இதுவென்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாங்கள் எங்கள் நெல் களஞ்சியசாலைகள் அனைத்தையும் புதுப்பித்து வருகிறோம். எங்களது களஞ்சியசாலைகள் 300,000 கொள்ளளவு கொண்டவை. ஆனால் அவற்றில் 300,000 கொள்ளளவுக்கான நெல்லை எங்களால் கொள்வனவு செய்யமுடியாது. அதனால் அந்தக் களஞ்சியசாலைகளைத் தனியார் துறை அரிசி சேகரிப்பாளர்களிடம் கொடுக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அதன் பின்னர் அவர்கள் நெல்லை எடுத்து எங்கள் களஞ்சியசாலைகளில் சேமித்து வைப்பார்கள். இதன்போது அரிசியின் அளவு எமக்குத் தெரியும். இலங்கையில் அரிசி ஆலைகளை நடத்தும் அனைத்து நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் வணிகர்கள் அரசாங்கத்தில் பதிவுசெய்யவேண்டும். அரசாங்கத்தில் பதிவுசெய்யப்படாத எவரும் இனிமேல் நெல் இருப்புகளைச் சேகரிக்கமுடியாது- என்றார். (ச-இ)

# அரச சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு பாதீட்டில் நிதி!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு. ஜன.27
அரச சேவையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களின் உரிமை என்றவகையிலும், அரச அதிகாரிகளின் பொறுப்பு என்ற வகையிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அரச சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தற்போதுள்ள அரச சேவையில் நாட்டு மக்கள் திருப்தியடையவில்லை. அரசாங்க சேவையை டிஜிட்டல் மயப்படுத்துவதன் ஊடாக மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க எதிர்பார்க்கின்றோம்.
எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் அரச சேவையில் சரியான தரவுக் கட்டமைப்பொன்றைத் தயாரிப்பதற்காகச் செயலாற்றுகின்றோம். தற்போதுள்ள அரச சேவையின் தரவுகளின் அடிப்படையில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்குரிய இயலுமை இல்லை.
அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படைச் சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை மூன்று வருடங்களுக்கு முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான முன்மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும்.
அரச சேவையில் தற்போதுள்ள சுமார் 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் தேவையான நிதியை ஒதுக்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

# அரசியல் ஆதாய கைதுகள் வழக்குகள் தொடுக்கப்படும்

## கம்மன்பில எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 27
அரசியல் தேவைகளுக்காகப் பொய்யான முறையில் கைதுசெய்தால், அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
2015 ஆம் ஆண்டும் யோசித ராஜபக்ச கைதுசெய்யப்பட்டார். 42 நாள்கள் சிறையில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார். இன்னும் வழக்குத் தொடுக்கப்படவில்லை. விமல் வீரவன்ஸவுக்கும் இப்படித்தான் நடந்தது.
நிதி மோசடி விசாரணைப் பிரிவின் செயலாளராக அன்று இருந்த ஆனந்த விஜேபால தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக உள்ளார். எனவே, அவர்தான் கைதுகளுக்கு தலைமை தாங்குகின்றார். 2015 இல் நடந்ததுதான் தற்போதும் நடக்கின்றது. பொய்யான முறையில் கைது செய்து விளக்கமறியலில் வைத்தால் அதனைச் செய்பவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்போம் என்பதை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட ஆளுங்கட்சியினருக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0436 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| D | 3 3 2 3 9 9 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2702 | H | 01 19 42 65 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 04 23 35 48 | 4863 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| தனுசு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 13 37 52 54 | 4414 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 26 | 03 24 27 57 | 1878 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 01 07 53 71 | 2528 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 26.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0609 | 05 17 12 |

# இணக்கமில்லையாயின் தனிவழி

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு. ஜன. 27
ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் வெகுவிரைவில் பேச்சு நடத்துவார்கள். பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் இணக்கத்துக்கு வராவிட்டால் தனிவழி செல்ல நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன பொதுச் சின்னத்தின்கீழ் ஒன்றிணையலாம். இரு கட்சிகளிலும் தலைவர்கள் இருக்கலாம். இணக்கத்துடன் செயற்படக்கூடிய செயலாளரை நியமித்தால் பிரச்சினை தீர்ந்துவிடும்.
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்தால் 40 இலட்சம் வரையான வாக்குகளைப் பெறமுடியும். மொட்டுக்கட்சியின் வாக்குகள்தான் ஜே.வி.பி. வசம் சென்றுள்ளது. இரு தலைவர்களும் இணக்கத்துக்கு வராவிட்டால் மீண்டும் தனித்துச்செல்ல வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ச-44)

# எம்.ஜி.ஆர். பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.27
புரட்சித்தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனது 108ஆவது பிறந்த தின நிகழ்வானது எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம் சமூக சேவை அமைப்பினரால் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் கலையரங்கில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் உலருணவுப் பொதிகள் வழங்கல், பரிசில்கள் வழங்கல், சிறுவர்கள், முதியோர்களுக்கு உதவிகள் வழங்கல், கலைஞர்கள் கௌரவிப்பு ஆகியன இடம்பெறவுள்ளன. (ச-41,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளத்திறக்கப்படவுள்ள விசாரணைக் கோப்புகள்

**கொழும்பு, ஜன. 27**
**29,000 கோப்புகள் விசாரணைகளில் சிக்கியுள்ள நிலையில் அவற்றைப் புதிய கட்டமைப்பினூடாக மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் இருந்து நிர்வகிப்பது சாத்தியமில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதற்கமைய பொலிஸாருக்கு புதிய கட்டமைப்பு உருவாக்கப்படும். குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் மேலும் பல பிரிவுகள் உருவாக்கப்படும். இதற்காக புதிய துணைப் பொலிஸ்மா அதிபர்கள் தேவை.
நிதி குற்றங்கள், கொலைகள், போதைப்பொருள் குற்றங்கள் போன்றவை தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் மீது அரசாங்கம் முழு நம்பிக்கை கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-இ)

## மீனவர்களுக்கு காப்பீட்டுத்திட்டம்

கொழும்பு, ஜன. 27
மீனவர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில்,நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.
இதற்காக ஒரு காப்பீட்டு நிறுவனம் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளது என்றும் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்துக்குப் பின்னர் மீனவர்களுக்கு இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**அத்துமீறி மீன்பிடி:**

## 33 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

மன்னார், ஜன. 27
தலைமன்னாருக்கு வடக்காக உள்ள கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 33 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
நேற்று அதிகாலை கடற்படையினர் முன்னெடுத்த கண்காணிப்பு நடவடிக்கையின்போதே குறித்த மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் கிளிநொச்சி நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நீரியல்வளத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)

## உற்பத்தி வீழ்ச்சியாலேயே தேங்காய்க்குத் தட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 27
நாட்டில் தேங்காய்களின் விலை அதிகமாக இருப்பதற்குப் பிரதான காரணம், மக்கள் தொகை அதிகரிப்புடன் ஒப்பிடும்போது கடந்த 20 ஆண்டுகளில் தேங்காய் உற்பத்தி குறைந்துவருவதேயாகும் என ருஹுணு பல்கலைக்கழகத்தின் பயிர் அறிவியல் துறையின் மூத்த பேராசிரியர் அருணகுமார தெரிவித்துள்ளார்.
2000 ஆம் ஆண்டளவில் 3,000 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அப்போது நாட்டின் மக்கள் தொகை 18 மில்லியனாக இருந்தது. 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகை 23 மில்லியனாக அதிகரித்திருந்தாலும், தேங்காய் உற்பத்தி அதிகரிக்கவில்லை. தேவையைப் பூர்த்திசெய்யும் அளவுக்குத் தேங்காய் உற்பத்தி இல்லாததே தேங்காய் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)



## ஒன்றுடன் ஒன்று மோதி 3 பேருந்துகள் விபத்து

### 29 பேர் காயம்

கொழும்பு, ஜன. 27
மூன்று பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 29 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து காலி, அங்குலுகஹ பகுதியில் நேற்று நடந்துள்ளது.
நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு பேருந்துகளுடன் வீதியில் பயணித்த மற்றொரு பேருந்து மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. (ச-இ)

கடந்தாண்டில்

## சுகாதார விதிமீறல்கள்; ரூ. 207 மில். அபராதம்

கொழும்பு, ஜன. 27
கடந்த 2024 ஆம் ஆண்டில் சுகாதாரவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 23,953 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. அவற்றில் நிறைவடைந்த வழக்குகளுக்கு நீதிமன்றங்களால் 207 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் இந்தாண்டில் நுகர்வோர் முறைப்பாடுகள் மீது விரைவாகச் செயற்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)




"ஜில் ஜில்
காதல் தில் தில்
கன்னத்தில் முத்தமிட்டால் ..."

"தில் தில் மனதில்
தல் தல் தல் காதல்
சில் சில் எனும் நெஞ்சில்
சல் சல் சல் எனும் ஊஞ்சல்.."

என்னடா பட்சி கடும் புளுகத்தில இப்பிடி ஒரே சினிமாப் பாட்டாப் படிக்குதெண்டு யோசிப்பியள். உங்களுக்கு அதைப் பார்க்க சினிமாப்பாட்டு மாதிரித்தான் கிடக்கும். ஆனால் இதெல்லாம் பாடமாக்கி வைக்கவேண்டிய கட்டாயம் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு வந்திட்டு. ஒழுங்காப் பாடமாக்காமல், பிழையாக எழுதினால் அடிதான் விழுமாம். கிளிநொச்சியில உள்ள ஒரு பள்ளிக்கூடத்திலதான் இப்பிடிச் சினிமாப் பாட்டுகளைப் படிப்பிக்கினமாம். அந்தப் பள்ளிக்கூடத்தில பத்தாம் ஆண்டுப் பிள்ளையளுக்கு கிட்டடியில தமிழ் வாத்தியார் சொல்வதெழுதுதல் வைச்சிருக்கிறார். சொல்வதெழுதுதல் எண்டால் என்னெண்டு தெரியும் தானே? வாத்தியார் சொல்லச் சொல்ல பிள்ளையள் அதைச் சரியாக எழுதவேணும். தமிழ், இங்கிலிஷ்ல இருக்கிற கஷ்டமான சொல்லுகளை பிள்ளையள் மறக்காமல் இருக்கோணும் எண்டதுக்காகவும், பிழை விடாமல் எழுதத் தெரியவேணும் எண்டதுக்காகவும்தான் இப்பிடிச் சொல்வதெழுதுதல் வைக்கிறவை. ஆனா எப்ப படிப்பிக்க பஞ்சியா இருக்கோ இல்லாட்டி எப்ப அவை படிப்பிக்கிறதுக்கு சிலபஸில உள்ள விசயங்களை ஆயத்தப்படுத்தாமல் வருகினமோ அண்டைக்கு இப்பிடி சொல்வதெழுதுதலை வைச்சு நேரத்தைப் போக்காட்டுற ரீச்சர்மார், வாத்திமாரும் இருக்கினம்.


சரி, இப்ப விசயத்துக்கு வருவம். பொம்பிளைப் பிள்ளையள் மட்டும் படிக்கிற அந்தப் பள்ளிக்கூடத்தில, சொல்வதெழுதல் வைக்க வெளிக்கிட்ட வாத்தியார் அண்டைக்கு ஏதோ குஷி மூட்டில இருந்திருக்கிறார் போல. மேல எழுதின 'தல், ஜில், தில், சல்' எண்டு வாறமாதிரியான சினிமாப் பாட்டுகளைப் படிக்கத் தொடங்கிட்டார். பிள்ளையளுக்கு ஒரே குழப்பம். "சேர் வகுப்பு நடத்திறாரா இல்லாட்டி ஏதும் சினிமாப் பாட்டுக் கச்சேரி நடத்துறாரோ" எண்டு தெரியாமல் பிள்ளையள் முழுச வெளிக்கிட, "எழுத்துப்பிழை இல்லாமல் எழுதோணும். பிழைவிட்டால் அடிதான்" எண்டு வாத்தியார் உறுக்கத்தான், "அப்ப உண்மையாவே சொல்வதெழுதல்தான் வைக்கிறார்" எண்டு பிள்ளையளும் பயபக்தியோட உந்தச் சினிமாப்பாட்டுகளை எழுத்துக்கூட்டி எழுதியிருக்கினம்.

சொல்வதெழுதல் வைக்கிறதுக்கு எத்தினையோ ஊரிப்பட்ட சொல்லுகள் தமிழில கொட்டிக்கிடக்க, அந்த வாத்தியார் ஏனிப்பிடி குப்பைச் சினிமாப் பாட்டுக்களை பிள்ளையளுக்குச் சொல்வதெழுதுதல் வைச்சவர் எண்டு தெரியேலை. சரி, அவருக்கு சினிமாப் பாட்டுகள் மூலம் பிள்ளையளுக்கு தமிழைப் படிப்பிச்சால் அவைக்கு ஆர்வம் வருமெண்டு நினைச்சு இப்பிடி ஏதும் வித்தியாசமாச் செய்ய வெளிக்கிட்டாரோ தெரியேலை. அப்பிடி வித்தியாசமாப் படிப்பிக்க நினைச்சாலும், எத்தினையோ நல்ல நல்ல சினிமாப் பாட்டெல்லாம் இருக்க, இப்பிடி ஒண்டுக்கும் உதவாத சக்கைப் பாட்டுகளை ஏன் தேடிப்பிடிச்சாரெண்டுதான் விளங்கேலை. உப்பிடியானவை படிப்பிச்சால் தமிழ் மட்டுமில்லை பிள்ளையளும் நல்லா 'விளங்குவினம்'!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 03 . 1939 | 25 . 01 . 2025 |

## நாகலிங்கம் பஞ்சாட்சரம்

இல.37, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பஞ்சாட்சரம் கடந்த 25.01.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவியின் கணவரும், காலஞ்சென்ற செல்வராசா - அமுதம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி, கனகரத்தினம், தேவராசா, தியாகராசா, ராசாத்தியம்மா, நாகரத்தினம் ஆகியோரின் சகோதரனும், வசந்தமலர், வசந்தகுமாரி (பிரான்ஸ்), ஜெயராணி, சந்திரமோகன் (வினோ நகைப் பூங்கா, யாழ்ப்பாணம்), கிருஸ்ணமோகன் (பிரான்ஸ்), துஸ்சாந்தினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பற்குணம், ஆனந்தராசா (பிரான்ஸ்), ரவிச்சந்திரன், ரஜனி, சுகந்தினி (பிரான்ஸ்), ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லினோதன் (பிரான்ஸ்), நினேகா, ஐந்துசன் (பிரான்ஸ்), தருணிகா (பிரான்ஸ்), நிருஷன் (பிரான்ஸ்), புவிதரன் (பிரான்ஸ்), தர்மிகன், ரதிசியா, சாருன்யன், அஸ்வின், சபினயா, பிறிஸ்ரிகா (பிரான்ஸ்), பாருஷன் (பிரான்ஸ்), கஜிகா, கோபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயாணத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**37, பெரியதம்பிரான் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
**மகன் - 076 8731 511**
**077 1151 581**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 29714) A







# இந்திய குடியரசுதினம் யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெற்றன.

இதன்போது யாழ்ப்பாணம் இந்திய உதவித் தூதுவர் சாய் முரளி இந்தியத் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. அதனையடுத்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-125)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜன.27

சப்பச்சி மாவடி விநாயகர் கோவில் நூதன த்ரிதள ராஜகோபுர மஹாகும்பமுழுக்கு எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி காலை 9.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனையொட்டி பெப்ரவரி முதலாம் திகதி சிவஸ்ரீ குமார.ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் கிரியைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-9)

# மரண அறிவித்தல்



## இராசநாயகம் ராஜேஸ்வரி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.05.1948 | 24.01.2025 |

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் தற்காலிகமாக கொழும்பிலும் நிரந்தர வசிப்பிடமாக அல்லைப்பிட்டியையும் கொண்ட அமரர் இராசநாயகம் (பேபி, கொட்டடி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற யோன்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கந்தையா கனகேஷ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், ரதீஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவிசங்கர் மற்றும் ரமேஸ்குமார் (லண்டன்), ரஜேஸ்கண்ணா (சுவிஸ்), லக்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும், வணிதா, வவ்சியா, விஜயகரன் சன்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், ராமனுஜன், அபிநயன், அக்சரா, அனிஷ்கா, ஆருசன், அஸ்விகா, கிசாந் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 82 44 997**

(CS 29716) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## களைகளைக் காக்காதீர், பிடுங்கியெறியுங்கள்!

'களை பிடுங்குதல் 'என்பது விவசாயத்தில் மிகமுக்கியமானதும், அவசியமானதுமான செயற்பாடு. பயன்தரும் பயிர்களை இந்தக் களைகள் வளரவிடாது. அந்தப் பயிர்களுக்குக் கிடைக்கவேண்டிய நீரையும், உரத்தையும் இந்தக் களைகள் தாம் உறிஞ்சிக்கொண்டு, அவற்றை மேவிப்பரவி வளர்வதால் விளைச்சலும் வீழ்ச்சியடையும். நிலமும் பாழ்பட்டுப்போகும். இதற்கு ஒரேவழி, 'களையும் ஒரு தாவரம் தானே' என்ற ஈவிரக்கம் பாராமல் அதனைப் பிடுங்கி அப்புறப்படுத்தினால்தான் அந்த நிலமும் வளமாகும், ஏனைய பயிர்களும் செழிப்பாக வளரும். இந்தக் களைபிடுங்குதலென்பது இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் அவசரமாகத் தேவைப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் போதையில் மூழ்கிய சில மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் தாம் போதைக்குள் மூழ்கியதோடு நின்றுவிடாமல், ஏனைய மாணவர்களுக்கும் அந்தப் பழக்கத்தை பரவலாக்கவும் முயன்றிருந்தனர். கல்லாசனம் ஒன்றைத் தமது நிரந்தரத் தளமாக்கிக்கொண்ட இந்த போதை மாணவப்பதர்கள் அந்தப் பகுதியால் நடமாடும் மாணவிகளைத் தகாத வார்த்தையால் சீண்டுதல், பாலியல் வக்கிரங்களை சொற்களில் கொட்டுதல், வெளியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு வந்தோரை முகஞ்சுழிக்க வைக்குமளவுக்கு கீழ்த்தரமாகக் கிண்டலடித்தல் என்று ஒரு காட்டுத்தர்பார் நடத்திவந்திருந்தார்கள். இப்படியே இவர்களை விட்டிருந்தால், வெகுவிரைவில் யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் 'பரமேஸ்வரன் பார்' ஒன்றையே அமைத்து , அங்குள்ள இன்னும் பல மாணவர்களை கெடுத்துக் குட்டிச்சுவராக்கியிருப்பார்கள். ஆனால் இதனைத் தட்டிக்கேட்ட நிர்வாகத்தினரும், கலைப்பீடாதிபதியும் அவர்களை இனங்கண்டு விசாரணை செய்து, அதன் முடிவில் சிலருக்கு வகுப்புத்தடை விதித்திருந்தார்கள். பயிர்களை நாசம் செய்யும் களைகளைப் பிடுங்குதலைப் போல இவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டு, ஏனைய மாணவர்கள் காப்பாற்றப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வகுப்புத்தடை விதிக்கப்பட்ட மாணவப்பதர்களுள் கலைப்பீடத்தின் அப்போதைய தலைவரும் உள்ளடக்கம். ஏனைய மாணவர்களை வழிநடத்தவேண்டிய ஒருவரே, இப்படிக் குடித்து கூத்தடித்தால், எப்படி அந்த மாணவசமுதாயம் ஆரோக்கியமாகப் பயணிக்கமுடியும்? ஒருகாலத்தில் 'பொங்கு தமிழ்' போன்ற ஜனநாயகப் போராட்டத்தை துப்பாக்கி முனைகளுக்கு முன்னால் துணிச்சலாக நடத்தி, பல்கலை மாணவர்கள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டுமென முழு உலகுக்கு முன்னுதாரணமாக விளங்கிய மாணவர்கள், இப்படி போதைக்குள் மூழ்கி தறிகெட்டுப்போவதையே சிங்கள பௌத்த அதிகாரமும் விரும்பியது. அத்தோடு மாணவர்களை போதையின் இருட்டுக்குள் வழிநடத்தி, அவர்களை ஆட்டுமந்தைகளாக்கும் நிகழ்ச்சிநிரலையும் பேரினவாத அதிகாரத்தரப்பு முன்னெடுத்தது. அப்படியான நிகழ்ச்சி நிரல்களுக்கு இந்த 'வகுப்புத்தடை' பேரிடியாக அமைந்தது. ஏனென்றால், இனிமேல் போதையுடன் வந்து தவறாக நடந்தால், பின்னர் 'பல்கலைக்கழ கத்துக்குள் காலடி எடுத்துவைக்கமுடியாது' என்ற தண்டனை கிடைக்குமென்ற பயத்திலேயே பல மாணவர்கள் மதுவைத் தொடுவதையே வெறுத்தனர். ஆரோக்கியமான மாணவசமுதாயம் மீண்டும் துளிர்விடும் எத்தனம் தென்பட்டது. ஆனால் அந்தத் துளிரைக் கருக்கிவிடுவது போன்று, குறித்த போதை மாணவர் களுக்கான வகுப்புத்தடையை நீக்கவேண்டும் என நான்குபேர் உண்ணாவிரதம் இருக்க, அதற்குப் பணிந்து மூதவையும் தடையை விலக்கிக்கொண்டுள்ளது.


சுயநிர்ணய உரிமைக்காகக் குரலெழுப்பிய ஒரு மாணவ சமுதாயம் இருந்த அதே பல்கலைக்கழத்தில் 'குடித்துக்கூத்தடித்து குழப்படி செய்தவர்களை' விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்த காலக்கொடுமையை என்னவென்பது? அதற்கு செவிசாய்த்து வகுப்புத்தடையை விலக்கிக்கொண்ட மூதவையின் நிர்வாகத்திறனை எப்படிச்சொல்வது? இந்த அநீதிகளுக்கு எதிராக ' வகுப்புத்தடை அந்த மாணவர்களுக்கு ஏன் விதிக்கப் பட்டது என்ற உண்மையை வெளிப்படுத்துங்கள், பல்கலைக் கழகத்தின் இந்த வகுப்புத்தடை விடயத்தில் இருந்த உண்மையைத் திரித்து மாணவர்களை தவறாக வழிநடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று தெரிவித்து அவ்வாறில்லாத பட்சத்தில் பதவியை விட்டு விலகுவதாகக் கூறி, தனது பதவிவிலகல் கடிதத்தையும் துணைவேந்தரிடம் சமர்ப்பித்துள்ளார் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி. களைகளைப் பிடுங்கவேண்டிய மூதவையே களைகளுக்கு காவலாக இருந்தால் , இப்படியான முடிவைத்தானே முதுகெலும்புள்ள எவரும் எடுப்பார்கள். ஆனால் கலைப்பீடாதிபதி போன்று மாணவர்களைச் சரியானபடி வழிநடத்தக்கூடிய நெஞ்சுரமும், நேர்மைத் திறனும் மிக்கவர்கள் பதவிகளை விட்டு விலகுதல் என்பதும் களைகள் பரவ வழிவகுத்துவிடும். எனவே கலைப்பீடாதிபதியின் கோரிக்கைகளை ஏற்று, விசாரணை நடத்தி, உண்மைகளை வெளிப்படுத்தி, களைகளைப் பிடுங்கி, யாழ்.பல்கலைக்கழகத்தை மூதவையும், நிர்வாகத்தினரும் தலைநிமிரச் செய்யவேண்டும். செய்வார்களா?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு நாளையும் அறுவடைக்கான நாளென்று மதிப்பிடாதீர்கள், ஒவ்வொரு நாளும் விதைப்பதற்கான நாளென்று எண்ணுங்கள்.

– ஸ்டீவன்சன்–




## காங்கேசன்துறைக்கு இரவு தபால் ரயில்



கொழும்பு, ஜன. 27
கொழும்புக் கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இரவு தபால் ரயில் சேவையை ஜனவரி 31 ஆம் திகதி முதல் தினமும் நடைமுறைப்படுத்த ரயில்வேத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து இரவு 8 மணிக்குப் புறப்படும் ரயில், மறுநாள் அதிகாலை 4.35 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தை வந்தடையும்.
காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து இரவு 8 மணிக்குப் புறப்படும் ரயில், மறுநாள் அதிகாலை 4.40 மணிக்கு கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும் என்றும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## எயார்லைன்ஸ் விற்பனையில்லை

கொழும்பு, ஜன. 27
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனமாக தொடர்ந்து இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
முந்தைய அரசாங்கம் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை விற்பனைசெய்யத் திட்டமிட்டிருந்தது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)



## சுதுநோனா கைது

கொழும்பில் பிரபல போதைப்பொருள் விற்பனையாளாரான சுதுநோனா என்று அழைக்கப்படும் ரேகா துஷாரி நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொலன்னாவ பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் ஐஸ் போதைப்பொருளுடன் அவர் கைதுசெய்யப்பட்டாரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வாகன இறக்குமதிக்கு ஒரு பில்லியன் டொலர்

கொழும்பு, ஜன. 27
இலங்கையில் இந்த ஆண்டில் வாகன இறக்குமதிகளுக்காக ஒரு பில்லியன் டொலரை ஒதுக்குமாறு மத்திய வங்கி, நிதி அமைச்சு அறிவித்துள்ளது.
அந்நியச் செலாவணிக் கையிருப்பில் இருந்து இந்தத் தொகையை ஒதுக்குமாறு அறிவித்துள்ளது. (ச-இ)

## புதிய ரயில் சேவை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 27
பல புதிய தொடருந்து சேவைகளை அறிமுகப்படுத்த தொடருந்து திணைக்களம் தீர்மானித்துள் ளதாகத் தொடருந்துப் பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இந்தத் தீர்மானம் சுற்றுலாத் தொழிற்துறையை மேம்படுத்துவதற்காகவும் நீண்டதூர சேவைகளுக்காகவும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - தை - 15
28.01.2025
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 03.36 - 05.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக ஒடுக்குமுறையை ஒழித்து நீதியை நிலைநாட்டுங்கள்

## நாடளாவிய ஊடக அமைப்புகள் இணைந்து ஜனாதிபதிக்கு மனு

**திருகோணமலை, ஜன. 27**

**வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடக சுதந்திரத்தைப் பேணும் அதேநேரம் கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் நாடளாவிய ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கையளிக்கப்பதற்காக மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.**

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 19 ஆவது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்களால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நீதிகோரிய போராட்டத்தின் பின்னர் குறித்த மனு கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் கடந்த பல தசாப்தத்தில் கொல்லப்பட்ட 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களில் பெரும்பாலானோர் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். அத்துடன் பல ஊடக நிறுவனங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும், அந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவோ சட்டத்தின்முன்நிறுத்தப்படவோ இல்லை.

படுகொலைசெய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதி வழங்கப்படவேண்டும் என சர்வதேச, தேசிய, வடக்கு, கிழக்கு ஊடக அமைப்புகளால் தொடர்ச்சியாகவும், மீண்டும் மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தப்பட்டபோதும் இதுதொடர்பான விசாரணைகள் தவிர்க்கப்பட்டே வருகின்றன.

எனவே படுகொலைசெய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நீதிக்காக தனியான விசாரணைக்குழுவை நியமித்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியை வழங்கேண்டும்.

அத்துடன் அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-33, 50,125)



வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலனின் வழிகாட்டலின் கீழ் பொலிஸ் உத்தியோகத்தர்களால் 'க்ளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதன்போது காங்கேசன்துறை சுற்றுலாத்துறையைச் சுத்தம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-41-27,125)

## கைவிடப்பட்ட திட்டங்கள்; புத்துயிரளிக்க ஆராய்வு

கிளிநொச்சி, ஜன. 27

கிளிநொச்சியில் அரசால் பல மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முறிப்புப் பகுதியில் 2011 ஆம் ஆண்டு பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நன்னீர் மீன்பிடித்தொட்டி தற்போது பற்றைகள் சூழ்ந்து காணப்படும் நிலையில் அதனை நேற்று முன்தினம் நேரில் சென்று இளங்குமரன் எம்.பி. பார்வையிட்டார். இந்த மீன்தொட்டிகளைப் பயன்பாட்டுக்கு கொண்டுவந்து நன்னீர் மீன்பிடி வளர்ப்பினூடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அத்துடன் ஆனையிறவு இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை ஆகியவற்றையும் மீண்டும் இயக்குவதற்கும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-113)

## மயானத் துப்புரவுக்கே பணம்பெறுகிறோம்

### சாட்டி இந்துமயானம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 27

சாட்டி இந்துமயானத்தில் சடலங்களைத் தகனம்செய்யும் நபருக்கான கூலி என்று பணம் அறவிடப்படுவதில்லை. மயான அபிவிருத்திப் பணிகளுக்கே கட்டணம் பெறப்படுகின்றது என்று சாட்டி இந்துமயான நிர்வாகம் தெளிவுபடுத்தியுள்ளது.

சாட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யும் நபரின் கூலியாக 2500 ரூபா வசூலிக்கப்படுகின்றது என்று உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவ்வாறு தகனம் செய்வதற்காக எமது நிர்வாகத்தினரால் கட்டணம் அறவிடப்படுவதில்லை.

மாறாக தகனம் செய்வதற்கு வேலணைப் பிரதேசசபையினரால் அறவிடப்படுகின்ற 5000 ரூபாவில் பிரதேசசபைக்கு ஆயிரம் ரூபாவும் மிகுதி 4 ஆயிரம் ரூபாவில் மயானத்தின் நிலையான அபிவிருத்திக்கு ஆயிரத்து 500 ரூபாவும் மிகுதி 2500 ரூபா தகனத்தின் பின்னரான மயானத் துப்புரவு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்குமே பயன்படுத்தப்படுகின்றது என்றும் சாட்டி இந்து மயானம் தெரிவித்துள்ளது. (ச)



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிக் கடற்படையினரால் வடமராட்சி நித்தியவெட்டை மருத்துவமனைச் சுற்றுச்சூழல் நேற்று துப்புரவு செய்யப்பட்டது. நித்தியவெட்டை மருத்துவமனை மருத்துவர் யோ.திவ்யாவின் கோரிக்கைக்கு இணங்க வெற்றிலைக்கேணிக் கடற்படை அதிகாரி றணசிங்கவால் ஒழுங்கமைக்கப்பட்டு இந்தத் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. (ச-27)

### புலமைப்பரிசில் பரீட்சை

## மன்னார் புனித சவேரியார் கல்லூரி சாதனை

மன்னார், ஜன. 27

புலமைப்பரிசீல் பரீட்சையில் அதிக சித்திகளைப் பெற்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாவட்ட ரீதியாக முன்னிலை பெற்றுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய 106 மாணவர்களில் 26 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு அதிகமான மதிப்பெண்களைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். விசேட தேவையுடைய மாணவர் ஒருவரும் இம்முறை சித்தியடைந்துள்ளார். மேலும் 87 வீதமானவர்கள் தேர்ச்சிப் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (ச-44-213)

## மானிப்பாய் சோதிவேம்படி யாழ்.மாவட்டத்தில் முதலிடம்


யாழ் . மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதத்தில் யாழ்ப்பாணம் மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை முதலிடம் பெற்றுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய 35 மாணவர்களில் 23பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். இது 66வீதமாகப் பதிவாகியுள்ளது. மேலும் 35 மாணவர்கள்70 புள்ளிகளுக்கு மேல்பெற்று சித்தியடைந்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 . 01 . 1941



மறைவு
15 . 01 . 2022

### அமரர் முருகையா நகுலேஸ்வரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: திரியோதசி

கண்ணுக்கு நிலவாய் நெஞ்சத்தில் அன்பால்
மண்ணில் என்றும் எங்களோடு
கண்கண்ட தெய்வமாய் வாழ்ந்து
விண்ணுக்கு வாழச் சென்று மூன்று வருடமாகிறது

185/1, கில்னர் லேன்
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 221 6742

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 06 . 1940



மறைவு
23 . 01 . 2025

### அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரினா (தங்கராணி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுக்கூட ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரினா (தங்கராணி) அவர்கள் கடந்த (23.01.2025) வியாழக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோணிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் புஷ்பராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெஸ்மன் (றூபன்), கெனத் (லசி), ஜீலியற் (பாமினி), காலஞ்சென்ற மேரி ஆன் (யாமினி), அலன் நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சர்மிளா, சுகந்தி, ஜெகதீசன், சுதர்சன் ஜெயகுமார், அமலா ஆகியோரின் மாமியாரும் ஜெனிபர், ஜெறின், நிக்கோல், டணி, யஸ்மி, றொகான், றெஜான், யோன் வலன், கஸ்தோன் வியான்னி, பியூரி ஆகியோரின் பேர்த்தியாரும் டியோனின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (28.01.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் யாழ் மரியன்னை பெயராலையத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்செஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 57334) P-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 10 . 1943



மறைவு
25 . 01 . 2025

### திருநாவுக்கரசு மங்களநாயகி

சுன்னாகம் மயிலணியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மங்களநாயகி அவர்கள் நேற்று முன்தினம் (25.01.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற தபாலதிபர், சுன்னாகம்) அவர்களின் பாசமிகு மனைவியும் யாழினி (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), பிரதீபன் (லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும் நந்தகுமார் (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தெய்வநாயகி, காலஞ்சென்ற இராசநாயகி, செல்வநாயகி (லண்டன்), ஜெயந்தன் (கனடா), வாகீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரிஷிபவன், அகிலேஸ், கவின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2025) திங்கட்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
076 967 4206
071 999 4755

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 07 . 1957



மறைவு
26 . 01 . 2025

### கனகசபாபதி சிவகுமாரன்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கு, ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி சிவகுமாரன் நேற்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கனகசபாபதி அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், முத்துதம்பி சின்னஆச்சி தம்பதியரின் மருமகனும், சிவகுமாரன் ரஞ்சிதமலர் (ரஞ்சி ரீச்சர் - இளைப்பாறிய ஆசிரியை ஏழாலை மகா வித்தியாலயம்) அவர்களின் கணவரும், சிவகுமாரன் சிவபிரணிக்கா அவர்களின் தந்தையும், கனகசபாபதி, தணிகாசலம், திருவிளங்கம் இராசத்தி அம்மா (அமரர்), பாலசுப்பிரமணியம், கணேசமூர்த்தி ராஜேஸ்வரி, கனகசபாபதி மகேந்திரராஜா, கனகசபாபதி யோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், மு. ஈஸ்வரநாதன் (அமரர்), மு.ஞானபிரகாசம், மு.தங்கமலர் (அமரர்), மு.பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 29716) A

## கஞ்சாவுடன் இளம்பெண் கைது

புத்தளம் மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னப்பாடுப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இளம் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சின்னப்பாடு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் 2 கிலோ 245 கிராம் கஞ்சா அவரிடம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா 8 இலட்சம் ரூபா பெறுமதியென மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஹெரோய்னுடன் பெண் கைது

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்புக்குளம் பகுதியில் 50 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கல்கிஸ்ஸைப் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

### பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கான பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/DWC/ 25-1117 | Elephant Proof Electrical Fence work at Iranaimadu - Murukandi – 22 km | 8.86 மில்லியன் | C8, C7 & C6 Building | ரூபா 89,000/- 27.05.2025 வரை | 3500.00 |
| 2 | KN/EB/13/IMP /25/1111-1 | Interlock Paving to the Path at District Secretariat, Kilinochchi. | 4.65 மில்லியன் | C9, C8 and C7 Building | ரூபா 47,000/- 13.05.2025 வரை | 2000.00 |
| 3 | KN/EB/13/IMP/ 25/1111-2 | Construction of Rear Boundary wall at Skill Development Centre at District Secretariat, Kilinochchi. | 4.25 மில்லியன் | C9, C8 and C7 Building | ரூபா 43,000/- 13.05.2025 வரை | 2000.00 |
| 4 | KN/EB/13/IMP/ 25/1111-3 | Construction of Children Park Fencing & GI Pipe Hut Work at District Secretariat, Kilinochchi. | 1.68 மில்லியன் | C9 and C8 Building | ரூபா 17,000/- 29.04.2025 வரை | 1500.00 |
| 5 | KN/EB/13/IMP/ 25/1111-4 | Laying Floor Tile at District Secretariat, Kilinochchi. | 1.66 மில்லியன் | C9 and C8 Building | ரூபா 17,000/- 29.04.2025 வரை | 1500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப் பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவனைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:- 0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 28.01.2025 ஆம் திகதியிலிருந்து 10.02.2025 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 05.02.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/.........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 11.02.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குமுன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**திரு சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(CR444173) J-1


## மணமகள் தேவை

1. துன்னாலை. இந்து. கௌரவகுலம் (V), 1984. மூலம். Graduate, UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
2. புலோலி. இந்து. கௌரவகுலம் (V), 1987. பூராடம். MSc, UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
3. வடமராட்சி. இந்து. கௌரவகுலம். (V), 1988. மிருகசீரிடம். Businees Managment UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
4. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1992 சுவாதி. Graduate, Newzealand + Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
5. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1993. சதயம் MSc in Software Engineer, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
6. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம்.(V), 1995. பரணி BSc Bio Medical Science Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
7. முல்லைத்தீவு - கொக்குவில். இந்து. குருகுலம். 1993. பூராடம். Mechanical Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை.
8. பருத்தித்துறை. RC, குருகுலம் (V), கலப்பு. மணமகன். 1988. IT Degree கனடா Citizen (Divorce) மணமகனுக்கு மணமகள் தேவை.
9. உசன் - பளை. இந்து. கௌரவகுலம்.(V), 1987. சுவாதி. MSc in Engineering, UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

எம்மிடம் எல்லா ஜாதியிலும், உள்நாட்டு, வெளிநாட்டு Unmarried, Divorce மணமகள்களும், மணமகன்களும் உண்டு.

S.Sharma J.P.
www.thaalee.com
திருமண சேவை
077 539 3728
whatsapp: 077 803 8193

## மரண அறிவித்தல்



### ஆனந்தர்
### பூபதிபாலவடிவேற்கரன் (பூபதி)

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி வீஸ்பாடனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தர் பூபதிபாலவடிவேற்கரன் (பூபதி) கடந்த 22.01.2025 இயற்கை எய்தினார்.

அன்னார் சூரியகுமாரியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான சபா ஆனந்தர் - அன்னம்மா தம்பதியரின் மூன்றாவது மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - கமலாதேவி தம்பதியரின் அன்புக்குரிய மருமகனும், காயத்திரியின் பாசமிகு தந்தையும், பெனி கென்சி அருள்ஞானத்தின் அன்பு மாமனாரும், கேந்திராவின் அண்ணாவும், ஏகன் அனேகன், யுவன் விஸ்வா ஆகியோரின் செல்ல அப்புவும், சபாபதிபாலகங்காதரன், இரகுபதிபாலஸ்ரீதரன், அருந்ததிஆனந்தகௌரி, காலஞ்சென்ற காயத்திரி ஆனந்தரமணி மற்றும் அமரசேனாதிபதி பாலகார்த்திகைக்குமரன், ஸ்ரீபதிபாலமுரளிதரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2025) திங்கட்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இணுவில்,
மேற்கு.

தகவல்:
சகோதரி
தேவரானா அருந்ததி ஆனந்தகௌரி

(cs.557331) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மேஷராசி அன்பர்களே! மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். தந்தையின் வழியில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** ரிஷபராசி அன்பர்களே! இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அக்கம்பக்கத்திலிருப்பவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! பல வகைகளிலும் அனுகூலமான நாள். முக்கிய முடிவு எடுப்பதற்கு முன்பு வாழ்க்கைத் துணையுடன் ஆலோசனை செய்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** கடகராசி அன்பர்களே! அனுகூலமான நாளாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். நீண்டநாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** துலாராசி அன்பர்களே! இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! இன்று எதிலும் பொறுமை அவசியம். உறவினர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். புதிய முயற்சி சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** மகரராசி அன்பர்களே! தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குலதெய்வக் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக் கூடும்.

**கும்பம்:** கும்பராசி அன்பர்களே! எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மீனராசி அன்பர்களே! காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். கூடுமானவரை வெளியூர்ப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்துவிடவும்.

## காலிச்...

லில் நான்கு கைதிகள் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த 4 கைதிகளும் காலி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைக்குள் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் நேற்றுப் பிற்பகல் அங்கு குவிக்கப்பட்டனர். பாதுகாப்புக் காக சிறைச்சாலையின் வெளிப்புற எல்லையில் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலைமை காணப்பட்டது.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘மண்’ கவிதை நூல் கிளிநொச்சியில் வெளியீடு

கிளிநொச்சி, ஜன. 27
கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவையின் வெளியீடாக அமரசிங்கம் கேதீஸ்வரனின் ‘மண்’ கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முதல்வர் சவரி பூலோகராஜா தலைமையில் இடம்பெற்றது.



நூலின் முதல் பிரதியை கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், கிளிநொச்சி மத்திய கல்லூரி முதல்வர் சவரி பூலோகராஜா, நூலாசிரியர் அமரசிங்கம் கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுவைக்க நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி சுதாகரன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ச-27)

## குடமுழுக்கு

திருகோணமலை மடத்தடி ஸ்ரீ ருக்மணி தாயார், ஸ்ரீ சத்தியபாமா தாயார் சமேத ஸ்ரீகிருஷ்ண பகவான் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ கும்பாபிஷேக கர்மாரம்பம் இன்று திங்கட்கிழமை. ஆரம்பாகவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் 2ஆம் திகதி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெற்று 3ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ச-41-50)

✦ ✦ ✦

யாழ்., ஜன. 27
வல்வை ஸ்ரீ வாலாம்பிகாதேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றையதினம் மாலை 6 மணிக்குத் திருக்கல்யாணமும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவும் இடம்பெறவுள்ளன.

(ச-25)


7ஆம் ஆண்டு நினைவு தினம்

அமரர் பசுபதி பாலரஞ்சன்



தோற்றம்
14.12.1965

மறைவு
15.01.2018

திதி: திரியோதசி
27.01.2025

ரஞ்சனமான ரத்தினமே! ரத்த பந்தம் விட்டு எங்கு சென்றீரோ
ரம்மியமான பேச்சால் பிரமிக்க வைப்பவரே-உம்
ரம்மிமான முகம் காண ராப்பகலாய் தவிக்கின்றோம்
ஏழாண்டு ஆனதையா நேரில் உமைக்கண்டு

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

குடும்பத்தினர்.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10 . 04 . 1932

மறைவு
27 . 01 . 2023

அமரர் குமாரசிங்கம் தங்கம்மா

மண்ணில் பிறந்தவர்கள் ஒருநாள்
மறைவதுண்டு அவ்வாறு
எங்கள் அன்புக்கும் பாசத்திற்கும்
உறைவிடமான அப்பம்மா
இன்று எங்களைப் பிரிந்து இரண்டு
ஆண்டுகள் ஆகிறது இன்றும்
உங்கள் நினைவுடன்...........
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(cs.57333) (N.1)

மரண அறிவித்தல்

மண்ணில்
06 . 11 . 1943



விண்ணில்
25 . 01 . 2025

யுவக்கீன் எட்மன் அருளானந்தம்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யுவக்கீன் எட்மன் அருளானந்தம் நேற்றுமுன்தினம் (25.01.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து யுவக்கீன் கிறேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யுவக்கீன் அன்ரனி மற்றும் செல்வராணி, ரோகினி, றாகினி, வினோதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல், தோமஸ் மற்றும் சண்முகத்தரசு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு (27.01.2025) திங்கட்கிழமை கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 3, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
021 222 3235

தகவல்:
செல்வராணி

(cs.57334) (N-1)

மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 05 . 1941



மறைவு
26 . 01 . 2025

சுப்பிரமணியம் சிவானந்தன்

காரைநகர், களபூமி பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இல 05, அம்பலவாணர் வீதி, அத்தியடி பிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவானந்தன் அவர்கள் நேற்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவரும் சிவாஜினி (லண்டன்), சிவரஞ்ஜினி (ஆசிரியை, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), சிவரூபினி (ஹற்றன் நஷனல் வங்கி, கைதடி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீராஜா (லண்டன்), சிறீதரன் (அதிபர், யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிஷா, கிருத்திகா, ஆகியோரின் அன்புப் பேரனும் சர்வேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் யோகநாதன் (லண்டன்), இராஜேஸ்வரி (கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் பவானி, வசந்தகுமாரி, அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 651 0837
077 218 6374

(CS 29720) P-1

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

முத்துலிங்கம் பிரேமாவதி



தோற்றம்
05.01.1943

மறைவு
27.01.2020

ஆண்டுகள் ஐந்து
ஆனது இன்று
அன்னை அவர் எமை
பிரிந்து சென்று
ஆண்டுகள் ஆயிரம்
ஆயிரம் ஆகலாம்
அன்னை அவர் பிரிவின்
துயர் ஆறிப்போகுமோ?

கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(cs. 57327) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின்...

இந்தியாவின் 76ஆவது குடியரசுத் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா இராஜதந்திர உறவைத் தாண்டி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடன் சகோதரனாகப் பயணித்து மக்களின் தேவைகளை அறிந்து உதவி செய்கின்றது. நாம் எடுத்த சில முடிவுகள் மாறுபாடான கருத்துகளைத் தோற்றுவித்திருக்கலாம். இத்தகைய அசாதாரண சூழ்நிலைகளில் யார் நண்பன், யார் பகைவன் என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும், கலாசாரத்துக்காகவும், நலனுக்காகவும் நாம் என்றும் ஆதரவாக இருப்போம். நாம் உங்களின் சகோதரர்கள். எனவே உங்களுக்கு எதிரான தவறான எண்ணங்களோடு உங்கள் சகோதரன்(இந்தியா) உள்ளானென்று ஒருபோதும், ஒருநொடியேனும் நம்பாதீர்கள். நீங்களும், நாங்களும், ஒரே பக்கத்தில் தான் உள்ளோம். வடக்கு, கிழக்கு மக்களின் பாதுகாவலனாகவும், சிறந்த நண்பனாகவும் நாம் என்றுமிருப்போம் - என்றார்.

(அ-எ-125)

## புதிய...

துள்ளார். தமக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சட்டப் போராட்டத்தைக் கையிலெடுத்துள்ள நிலையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சர்களுக்கு அரச வதிவிடம் வழங்கப்படமாட்டாது. மின்சாரக் கட்டணம், குடிநீர்க் கட்டணம் என்பவற்றையெல்லாம் அமைச்சர்களே செலுத்திக்கொள்ள வேண்டும். அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது. அமைச்சர்கள் சாதாரணமாகப் பயணிக்கின்றனர். எனக்கு மட்டுமே மூன்று வாகனங்கள் உள்ளன.

மக்களுக்கு சுமையை ஏற்படுத்திவிட்டு அரசியல்வாதிகள் சொகுசு வாழ்க்கை வாழவேண்டியதில்லை. அமைச்சர்களுக்கு இவ்வாறு குறைப்பு செய்துவிட்டு முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சலுகைகள் சிலவற்றைக் குறைக்க முற்பட்டால் அது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனக் கூறுகின்றனர். இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல. மக்கள் எதிர்பார்க்கும் சாதாரண அரசியல் கலாசாரத்தை நோக்கிய பயணமாகும்.

கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் இருவர் வாழ்வதற்கு ஒரு ஏக்கர் 10 பேர்ச்சுடன் வீடு எதற்கு? ஒரு மாடிதான் உள்ளது, ஆனால் மின்தூக்கி அமைக்கப்பட்டுள்ளது? இப்படி மக்கள் பணத்தை வீணடிக்க வேண்டுமா? பழைய அரசியல் கலாசாரத்தை கைவிடுங்கள். சாதாரண வாழ்க்கைக்கு வாருங்கள்.

மக்களின் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து, வீணடித்து சொகுசு வாழ்க்கை வாழ்வது தமது உரிமையென அவர்கள் கருதுகின்றனர். அந்த உரிமை மறுக்கப்பட்டால் வழக்குத் தொடுக்கப்படுமாம். சாதாரண வாழ்க்கைக்கு வாருங்கள் என அழைக்கின்றேன் - என்றார்.

(அ-எ-44)

## பதவியை...

இருந்து விலகும் கடிதத்தைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளித்துள்ளார்.

கலைப்பீட மாணவர்கள் சிலருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்ததை அடுத்து, மாணவர்கள் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்திருந்தனர்.

அதையடுத்து நேற்று பல்கலைக்கழக மூதவை கூடி இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்தது. மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வகுப்புத்தடையை நீக்குவதற்கு மூதவை தீர்மானித்தது.

இந்தநிலையில், வகுப்புத்தடை ஏன் அந்த மாணவர்களுக்கு விதிக்கப்பட்டது என்ற உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றும், வகுப்புத்தடை விடயத்தில் இருந்த உண்மையைத் திரிவுபடுத்தி மாணவர்களைத் தவறாக வழிநடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி ரகுராம், மூதவையின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்து, பீடாதிபதிப் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அவரது பதவி விலகலை துணைவேந்தர் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரியவருகின்றது. (அ-எ-இ)

## பெப்ரவரியில்...

மேற்கொள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டமிட்டுள்ளார்.

ஹோமாகம பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'இந்தப் பயணத்தின் ஊடாக எரிசக்தித்துறைக்குச் சிறந்த முதலீடுகளைப் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகும். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் இலங்கை தனிமைப்படுத்தப்படும் எனப் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. அதைச் சில தரப்புகளும் நம்பின. ஆனால் நாம் சிறந்தவகையில் சர்வதேச உறவை பேணிவருகின்றோம்.

முதலில் இந்தியாவுக்கு பயணம் செய்திருந்தேன். அதன்பின்னர் சீனாவுக்குச் சென்றிருந்தேன். இந்தப் பயணங்களின்மூலம் நாட்டுக்குப் பல நன்மைகள் கிடைத்தன. அடுத்து மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு திட்டமிட்டுள்ளேன். கடந்த பெப்ரவரி மாதம்தான் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து அதிகாரபூர்வமாக மீண்டது - என்றார். (அ-எ-44)

## அரச...

சம்பள அதிகரிப்பாக இருக்குமா அல்லது அலவன்ஸாக இருக்குமா என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை 7,500 ரூபாவுக்கும் கூடுதலாக சம்பளத்தை அதிகரிப்பதாயின் ஜனாதிபதியே அது பற்றி தீர்மானிக்க வேண்டும். இதேவேளை ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக வரவு - செலவுத்திட்டத்தில் எதுவும் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-6)

## மூன்றாம்...

தங்களால் பாதிக்கப்படாமல் நாம் ஒருவரை ஒருவர் ஆதரிக்கவேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியப் பதில் தூதுவர் சத்யாஞ்சல் பாண்டே தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 76ஆவது குடியரசுத்தினச் செய்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நமது கதைகள் பின்னிப்பிணைந்துள்ளன. நம் எதிர்காலம் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டது. இலங்கை இந்தியாவின் ஒரு முக்கியமான பங்காளியாக உள்ளது.

இந்தியாவும் இலங்கையும் சக ஜனநாயக நாடுகள் மாத்திரமல்ல. நாங்கள் நமது பன்முகத்தன்மை மற்றும் முனைப்புடமை ஆகியவற்றையும் பகிர்ந்துகொள்கின்றோம். நாங்கள் நாகரிகம் மிக்க சகாக்கள். எங்கள் வரலாறு, மொழி, மதம், நெறிமுறைகளை தொடர்ந்தும் பகிர்ந்துகொள்கின்றோம்.

எங்கள் புவியியல் ரீதியிலான நெருக்கம் எங்களை இயற்கையான பங்காளிகளாக மாற்றியுள்ளது. அதேவேளை அருகில் இருப்பதால் இரு நாடுகளும் பரஸ்பரம் ஏனைய நாட்டின் நலன்கள் குறித்த உணர்வை கொண்டிருப்பது அவசியமாகிறது. இயற்கை பேரிடர்களாக இருக்கலாம், கடலில் ஏற்படும் விபத்துக்களாக இருக்கலாம், கொவிட் பெருந்தொற்றாக இருக்கலாம் அல்லது சமீபத்தைய பொருளாதார நெருக்கடியாக இருக்கலாம், எதுவாக இருந்தாலும், இந்தியா முதலாவது நாடாக இலங்கைக்கு உதவ விரைந்து முன்வந்துள்ளது. எங்கள் ஆதரவு உரிய தருணத்தில் விரைவானதாக நிபந்தனையற்றதாக காணப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

## கொழும்பு...

பகுதியில் பயணித்தபோது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரயிலும் வந்ததால் அடுத்த தடத்துக்கு மாறியபோது தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இரு ரயில் பெட்டிகள் தடத்தில் இருந்து கீழிறங்கியதுடன், தண்டவாளத்துக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு நோக்கிச் செல்ல இருந்த பயணிகளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலில் ஏற்றிக் கொழும்புக்கு அனுப்ப ரயில் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகளை பஸ்களில் பயணிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

சேதமடைந்த தண்டவாளத்தைச் சீரமைக்கும் நடவடிக்கைகளை ரயில் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. இதனால் கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரையான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-எ-110)

## கலைப்...

நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ம.சோமபாலன் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மீளவும் கலைப்பீடாதிபதியாக பேராசிரியர் ரகுராம் நியமிக்கப்படும்வரையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் சாத்வீக ரீதியான போராட்டத்தை முன்னெடுக்கும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சில மாணவர்கள் பரமேஸ்வரன் ஆலயம், பொங்குதமிழ் தூபி முன்பாக முச்சக்கர வண்டிகள் சகிதம் நின்று போதைப்பொருள் மற்றும் மதுபானம் நுகர்ந்து ஏனைய மாணவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இது கலைப்பீட பீடாதிபதி, சட்ட நிறைவேற்று அதிகாரி, பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவதானிக்கப்பட்டது. அந்த மாணவர்கள் குழு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டதுடன், பொதுமக்கள் மத்தியில் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு ஆரம்பகட்ட விசாரணை, இரண்டாம் கட்ட விசாரணை, ஒழுக்காற்றுச் சபைக்குழு, அதைத் தொடர்ந்து பேரவை என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஒழுக்காற்றுச் சபை அந்த மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கான தண்டனை வழங்கியிருந்தது. போதைப்பொருள் பாவனை, மதுப்பாவனை என்பன தினமும் இடம்பெற்றுவந்ததன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது. மூதவை அதைக் கேள்விக்குட்படுத்திப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த கல்லாசனம் அகற்றப்பட்டமையை விமர்சித்தமையாலேயே பழிவாங்கப்பட்டோம் என்று அந்த மாணவர்கள் கூறுகின்றனர். ஏன் கல்லாசனம் அகற்றப்பட்டமையை கேள்விக்குட்படுத்துபவர்கள், ஏன் அந்தக் கல்லாசனம் அகற்றப்பட்டது என்பதை ஆராய்ந்திருந்திருந்தால் இந்த ஊடக சந்திப்பு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. பரமேஸ்வரா ஆலயத்துக்கு முன்பாக இருந்த கல்லாசனம் அகற்றப்பட்டமையால் மாணவர்கள் பலரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நான் எட்டு பேருக்கு மட்டும் கலைப்பீட மாணவ பிரதிநிதி அல்ல. 3 ஆயிரத்து 500 மாணவர்களுக்கான தலைவராகவே நான் உள்ளேன். சகலரின் கருத்தையும் கேட்கவேண்டும். அவர்களின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

இந்தப் பின்னணியில் இந்த முறைப்பாடு தொடர்பான ஒழுக்காற்றுக் குழுக்குழுவின் முறைமைகளைக் கடந்து, உண்ணாவிரதம் இருந்துவிட்டார்கள் என்பதற்காக வகுப்புத்தடையை பல்கலைக்கழக மூதவை விடுவித்திருப்பது எமக்கு கவலை தருகின்றது. மூதவையின் முடிவுக்காகவே காத்திருந்தோம். இனியும் மௌனம் காக்கமுடியாது. இந்த மாணவ ஒழுக்காற்று விசாரணை நடுநிலையாக ஒழுங்குமுறைப்படி நடத்தப்படவேண்டும். கலைப்பீடாதிபதி எந்த விடயத்துக்காக பாடுபாட்டாரோ அந்த விடயத்துக்கான வெற்றியோடு மீண்டும் பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும். போராசிரியர் ரகுராம் மீண்டும் பீடாதிபதியாக நியமிக்கப்படும்வரையில் கலைப்பீட மாணவர் ஒன்றியம் சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுக்கும். போராட்டம் தொடர்பான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக விரைவில் வெளியாகும் - என்றார்.

(அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோஷித ராஜபக்ச கைதில் அரசில் தலையீடு இல்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஜன.27

யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் அரசியல் தலையீடு எதுவும் இருக்கவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

'கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்சவுக்கு விலங்கிட வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை வழங்கியது என தகவல் வெளியாகியுள்ளதே?' என கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அமைச்சரோ, அமைச்சின் செயலாளரோ அல்லது ஜனாதிபதியே எவ்வித தலையீடுகளும் செய்யவில்லை. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை இடம்பெற்றது.

கடந்த காலங்களில் சிற்சில காரணங்களால் தேக்கமடைந்திருந்த சில விசாரணைகள் தற்போது, அரசியல் தலையீடுகள் இன்றி துரிதமாக முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. அந்த விசாரணை களின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-44)

A/L CHEMISTRY TAMIL / ENGLISH
ஆசிரியரால் (B.Sc, M.Sc (Chemistry)
தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
076 410 5838

விற்பனைக்கு
யாழ். பலாலி வீதியில் HVM எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 65 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும், யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள தனிக்கடையும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0777 232535
(CS 29715) A

English Classes
Home visiting
English Classes conducted in and around Nelliady for students of Grade 3 to11 classes, school leavers, employees of government & private sectors.
Contact. 074 289 9313.

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20.03.1950 |  | 25.01.2025 |

### ஆறுமுகம் சுந்தரலிங்கம்

காரைநகர் களபூமி கரப்பிட்டியந்தனையைப் பிறப்பிடமாகவும் இல. 99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் (25.01.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகுமாரியின் அன்புக் கணவரும், சர்மிளா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லப்பா (அப்பி - கனடா), சதீஷன் (கண்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தனபாலன் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அஜேய், பவிஷான், மதுஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2025) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 99, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 955 4155

(Cs 57337) N-1

## மரண அறிவித்தல்




### துரைராசா உதயசங்கர்

(தபால் நிலைய ஊழியர் - மூங்கில் உணவகம்)

தோற்றம் 07.10.1983 — மறைவு 24.01.2025

கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா உதயசங்கர் கடந்த 24.01.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் வாலாம்பிகை தம்பதியரின் அன்பு புதல்வனும், மேனகா, கௌரி, பிரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கெவின், பென், கிருஷ், சிவனியா, மகனியா ஆகியோரின் பாசமிகு மாமனும், பெனடிக், சிவகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 657 8654

(CS 57335) A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.01. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org